# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# தூது

நற்செய்தி துணுக்குகள்

**"யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்."** ***(மத்தேயு 2:2)***

டிசம்பர் – 2025
(மடல் - 25) செய்தி – 11

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மையும் நமது குடும்பத்தையும் வழிநடத்தி வந்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கின்றேன். குறிப்பாகக் கடந்த மாதத்தில் நமது அறுப்பின் பண்டிகையை மிகச் சிறப்பாகக் கொண்டாட ஆண்டவர் உதவி செய்தார். உற்சாகமாகப் பங்குபெறவும், மகிழ்ச்சியோடு ஆண்டவருக்கு நம்மையும் நமது காணிக்கைகளையும் கொடுக்கவும் கிருபைசெய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். கிறிஸ்மஸ் பண்டிகைக் காலங்கள் நமக்கும் நமது குடும்பத்துக்கும் மகிழ்ச்சியான காலங்களாகக் காணப்பட ஆண்டவர் அருள் செய்வாராக.

திருமறை முதன் முதலில் இறைவனை அறிமுகப்படுத்தும் பொழுது, **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியும் சிருஷ்டித்தார்** என்று அறிமுகப்படுத்துகிறது. ஆதியிலே வானம் இல்லை பூமி இல்லை ஆனால் ஆண்டவர் இருந்தார். உலகம் உண்டாவதற்கு முன்னதாகவே கடவுள் இருக்கிறார். அதோடு ஆண்டவரை முற்பிதாக்களின் தேவனாக அறிமுகப்படுத்துவதன் வழியாக கர்த்தர் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறார், அவர் இன்றும் நமது ஆண்டவராக இருக்கிறார் என்பதையும் காட்டுகிறது. நேற்றும் இன்றும் என்றும் உயிருள்ள கடவுளாக நம்முடைய ஆண்டவர் இருக்கிறார். என்றென்றும் உயிருள்ள கடவுள் இம்மானுவேலராக எப்படி நம்முடைய அன்றாட வாழ்க்கையில் செயலாற்றுகிறார் என்பதைத் திருமறை விளக்குகிறது.

**1. விடுதலைப் பணியில் கடவுள் நம்மோடு:**

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் அடிமை வாழ்வின் துன்பத்தை அனுபவித்தார்கள். அவர்கள் படுகின்ற வேதனையை குறித்து ஆண்டவர் சொல்லுகின்றார், **என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம அவர்கள் இடுகின்ற கூக்குரலை கேட்டேன். அவர்கள் படுகின்ற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். பாலும் தேனும் ஓடுகின்ற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய் சேர்க்கவும் இறங்கினேன் என்கிறார்.** (யாத்திராகமம் 3:7,8) இஸ்ரவேல் மக்களின் வேதனையைத் தாமும் அனுபவிப்பதாகச் சொல்கிறார். துன்பப்படுகின்ற தம்முடைய மக்களை விடுவிப்பதற்காக ஆண்டவர் மோசேக்குத் தமது வாக்குறுதியைக் கொடுத்து அழைக்கிறார். நான்

**இருக்கிறவராக இருக்கிறேன்** என்கிறார். விடுதலைப் பணியில் நான் உன்னோடு கூட இருக்கிறேன் என்று ஆண்டவர் வாக்குறுதி கொடுக்கின்றார். எகிப்தின் விடுதலைப் பணியில் ஆண்டவர் தம் மக்களோடு பயணிக்கின்றார். வரலாற்றில் ஒரு கடவுள் ஒரு மக்கள் கூட்டத்தோடு பயணிக்கிறார் என்றால் அது இஸ்ரவேல் மக்களோடு மட்டுமே. (உபகமம் 4:7) விடுதலைப் பணியில் ஆண்டவன் நம்மோடு இருக்கிறார்.

**2. துன்பத்தில் கர்த்தர் நம்மோடு:**

இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய சொந்த நாட்டிலே மீதியானியருக்குப் பயந்து வாழுகின்ற சூழல். நல்ல தேசத்தை ஆண்டவர் கொடுத்தார். ஆனால் ஆண்டவரை மறந்ததன் விளைவு, சொந்த தேசத்திலே அன்னியருக்குப் பயந்து வாழ்கின்ற சூழல் ஏற்பட்டது. மீதியானியர்கள் இஸ்ரவேலரின் விளைச்சல்களைக் கெடுத்தார்கள். கால்நடைகளை கொள்ளையிட்டார்கள். இஸ்ரவேல் மக்களின் பயிர்கள் எல்லாவற்றையும் அழித்தார்கள். இஸ்ரவேல் மக்கள் ஆண்டவரை நோக்கி மன்றாடுகிறார்கள், ஆண்டவர் மீண்டு ஒரு முறை உதவி செய்ய இறங்கி வருகிறார். பயந்து ஆலைக்குச் சமீபமாகப் போரடித்துக்கொண்டிருக்கின்ற கிதியோனை அழைத்து, **பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடு இருக்கிறார்** என்கின்ற வாக்குறுதியைக் கொடுக்கிறார். நெருக்கடியான துன்ப வேளையிலே கூப்பிடும்பொழுதெல்லாம் ஆண்டவர் நமக்கு உதவி செய்ய, நம்மோடு பயணிக்க தயாராக இருக்கின்றார். (சங்கீதம் 91:15)

**3. நம்பிக்கை இழந்த வேளையில் கர்த்தர் நம்மோடு:**

இயேசு கிறிஸ்துவின் மரணம் சீடர்களுக்குப் பயத்தைக் கொடுத்தது. எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கை இழந்து போனார்கள். யூதர்களுக்கும் ரோம அரசாங்கத்திற்கும் பயந்து, கதவை பூட்டிக் கொண்டார்கள். உயிர்த்த இயேசு கிறிஸ்து இம்மானுவேலராகத் தம்மை வெளிப்படுத்துகிறார். நம்பிக்கை இழந்தச் சூழலில் ஆண்டவர், நம்பிக்கையின் ஒளியாக நம்மோடு இருக்கிறார். நம்முடைய ஆண்டவர் உயிருள்ள ஆண்டவர், என்றென்றும் வாழ்கின்ற ஆண்டவர். கடவுளோடு இருந்தவர் நம்மோடு வாழுகின்றார் என்பதுதான் கிறிஸ்மஸ் பண்டிகை. இந்தப் பண்டிகைக் காலங்களும், புதிய ஆண்டும் நமக்கும் நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக .கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த மாதம் கிறிஸ்மஸ் பண்டிகை காலம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக!

கிறிஸ்மஸ் பண்டிகை காலத்துக்குள் வந்திருக்கிறோம். டிசம்பர் மாதம் என்றாலே நமக்கு மகிழ்ச்சி தான். வண்ண வண்ண விளக்குகள், நட்சத்திர அலங்காரங்கள், பட்டாசுகள், பட்டாடைகள், ஆராதனைகள், கலை நிகழ்ச்சிகள்,..... மாதம் முழுவதும் கொண்டாட்டம்தான். இந்த மகிழ்ச்சிக்கெல்லாம் காரணம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு. நமக்கு மட்டுமல்ல உலகம் மக்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த ஒரு நிகழ்வு இயேசு கிறிஸ்துவின் பிறப்பு.

வானத்தில் தோன்றிய விண்மீன் ஒன்று கிழக்கத்திய ஞானிகள் சிலருக்கு யூதருக்கு ஓர் அரசர் பிறந்திருக்கிறார் என்கிற செய்தியை தெரிவித்தது. விண்மீன் தோற்றத்திற்கும், மனித குல வரலாற்று நிகழ்வுக்கும் தொடர்பு உண்டா? என்ற கேள்வி எழுகிறது. ஆனால் இந்த நிகழ்ச்சியின் முக்கியமான செய்தி இறைவன் ஒவ்வொருவருக்கும் தம்மை பற்றிய திருவெளிப்பாட்டைத் தரக்கூடியவர் என்பதே. அதாவது உலக ரட்சகர் இவ்வுலகத்தில் பிறந்திருக்கிறார் என்பதை உலகின் மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக விண்மீன் வாயிலாக இயேசுவின் பிறப்பு பளிச்சிட்டுக் காட்டப்படுகிறது.

யூதருக்குதானே ஓர் அரசர் பிறந்திருக்கிறார் என்று ஞானிகள் சும்மா இருக்கவில்லை. நம்பிக்கையுடன் விரைந்து வந்து பணிந்து கொண்டனர்.

**விசுவாசம் உள்ள ஞானிகள் (Faith)**

ஞானிகளுக்கு முன்னே நட்சத்திரம் மட்டுமே இருக்கிறது. எங்கு போகிறோம், எவ்வளவு தூரம் போகிறோம், எப்பொழுது போய் சேருவோம் என்பதெல்லாம் தெரியாது. தங்கள் உறவையும். உடமையையும் விட்டுவிட்டு இயேசு பாலனை தரிசிக்கப் புறப்பட்டு விட்டார்கள். இது அவர்களுக்கிருந்த உறுதியான விசுவாசத்தை

காட்டுகிறது. ஆபிரகாம் தான் போகிற இடம் என்னவென்று அறியாமல் ஆண்டவரின் வார்த்தை நம்பி புறப்பட்டது போல விசுவாசத்தை மட்டும் முன்வைத்து புறப்பட்டார்கள். எபிரேயர் 11:6

**பணிந்து கொண்ட ஞானிகள்**

ஞானிகள் தூரத்திலிருந்து வந்ததின் நோக்கம் மேசியாவை பணிந்து கொள்வதற்காகத்தான். அக்காலத்தில் தூரப் பயணம் என்பது மிகவும் கடினமாகவும், ஆபத்தாகவும் இருந்தது என்றாலும் தங்கள் வசதிகளை தியாகம் செய்து பணிந்து கொள்ள வருகிறார்கள். தங்களின் அன்பு பரிசுகளோடும் திறந்த மனதோடும் தாழ்ந்த சிந்தையோடும் உலக ரட்சகரை பணிந்து கொள்ளும் ஆர்வம் உள்ள மாற்றுச் சமய மக்கள் எப்பொழுதும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

**கீழ்ப்படிந்த ஞானிகள்**

ஆழ்ந்த உண்மைகளை யூகித்தறிக்கக் கூடிய திறம்படித்த ஞானிகள் கூட போக்குகளுக்குட்பட்டுச் சிந்திப்பதால் யூதருக்கு அரசன் அரண்மனையில் தான் பிறப்பார் என்று எண்ணிவிட்டார்கள். ஆனால் ஆண்டவருக்கா? அரசனுக்கா? யாருக்குக் கீழ்ப்படிவது? என்ற கேள்விகளுக்கு ஞானிகள் எடுத்த தீர்மானம் இறைவன் மீது அவர்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துகிறது. பண்டிகையைக் கொண்டாடுகிற நாம் தன்னை வெளிப்படுத்திய இயேசுவை கண்டிருக்கிறோமா? அவரை பணிந்து கொள்ள எந்த தியாகத்தையும் செய்ய முன் வந்திருக்கிறோமா? ஆண்டவருக்கா, அரசனுக்கா என்ற இக்கட்டான சூழ்நிலையில் யாருக்கு கீழ்ப்படிந்திருக்கிறோம்? புதிய சிந்தனையோடு கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுவோம். கர்த்தர் நம்மையும் நமது குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

மீட்பரின் பணியில்
திருமதி. ஜெபா சாமுவேல்

## பவுலும் இம்மானுவேலும்

, "இம்மானுவேல் – தேவன் நம்மோடிருக்கிறார்" (மத் 1:23) என்ற உண்மை, பவுலின் வாழ்க்கையிலும் அவருடைய ஊழியத்திலும் மிகவும் தெளிவாக காணப்பட்டது. பவுல் சென்ற ஒவ்வொரு இடத்திலும், அவர் எதிர்கொண்ட ஒவ்வொரு நிலையிலும், தேவ பிரசன்னம் ஒரு புதிய கோணத்தில் அவரால் உணரப்பட்டது. இம்மானுவேலாக கர்த்தர் அனைவரின் வாழ்க்கையிலும் செயல்படுகிறார். பவுலின் வாழ்க்கையில் எவ்வாறு செயல்பட்டார் என்று இப்போது நாம் பார்ப்போம்.

.

**தமஸ்கு செல்லும் வழியில்**



கிறிஸ்தவர்களை கொலை செய்யும்படி சென்றபோது வழியில் இயேசுவின் பிரசன்னம் பவுலைத் தடுத்து நிறுத்தியது. "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" என்று சொல்லும் இயேசுவின் சத்தத்தை முதல் முதலாகக் கேட்டார்(அப்.9:5). கொலைவெறியோடு சென்ற சவுல், ஒரு அப்போஸ்தலனாக மாறினார்.

**அனனியாவின் வீட்டில்**

தமஸ்குவின் வழியில் சொன்னபடி அனனியாவின் வீட்டில், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்(அப்.9:17-18). வழியில் சந்தித்த இயேசு பவுலின் உள்ளத்தில் தங்க வருகிறார். அதன்பின் தாமதமின்றி தன் அப்போஸ்தல ஊழியத்தைத் தொடர்ந்தார்.

**கொரிந்து பட்டணத்தில்**

பவுல் கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்தபோது பெரும் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்தது. கர்த்தரை ஏற்றுகொண்ட, ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்புவின் வீட்டில் இருந்த போது, இராத்திரியில் கர்த்தர் பிரசன்னமாகி, "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" என்று கூறி அப்போஸ்தல ஊழியத்தை செய்ய பலப்படுத்தினார். (அப்.18:9,10). பொறுப்பை அளித்த கர்த்தர் இம்மானுவேலாக எப்பொழுதும் கூட இருப்பதை உறுதிபடுத்துகிறார்.

**எருசலேமின் காவலில்**

எருசலேமில் கைது செய்யப்பட்டு யூதர்களின் கொலைச் சதியும், அரசியல் குழப்பங்களும் நடக்கின்ற சூழலில் பவுல் இருக்கிறார் (அப்.23). அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்

என்றார். ஆலோசனை சங்கத்தின் விசாரணை, மக்களின் கோபம் போன்றதொரு அமைதியற்ற சூழலில் இருக்கும்போது, ஒரு சிநேகிதனைப் போல கூட இருந்து தைரியமளித்து, தன்னுடைய திட்டத்தையும் வெளிப்படுத்துகிறார்.

**கடலில் – புயலின் மத்தியில்**



ரோமாபுரிக்கு சிறைக் கைதியாக பயணப்பட்டு செல்கிறார் பவுல். பெருங்காற்று மழையில் அனைவரும் சிக்கி செய்வதறியாது, திகைத்து, மரணபயத்தோடு, போராடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது பவுல் திடமனதாயிருங்கள் என்று தைரியம் சொல்கிறார். அதன் காரணம் அவர் கண்ட தரிசனம் (அப்.27:23,24). "ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார்" என்றான். என்னை ஆட்கொண்டவர், நான் சேவிக்கிறவர் என்று பவுல் கூறும் வார்த்தைகள் பவுலுக்கு கர்த்தரோடுள்ள ஆணித்தரமான உறவைக் காட்டுகிறது. அதனால் தான் பவுலால் இம்மானுவேலின் பிரசன்னத்தை உணர முடிந்தது.

"இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா.2:20) என்று கூறும் பவுல், தமஸ்குவின் வழியில் கர்த்தரின் சத்தத்தைக் கேட்ட நாளிலிருந்து, தேவ பிரசன்னத்தை தன் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் அனுபவித்தார் என்றே கூறலாம். "இம்மானுவேல்" என்ற பதத்தை மத்தேயு கூறுவது போல், பவுல் உபயோகிக்கவிட்டாலும், அப்பதத்தின் அர்த்தத்தை, தான் அனுபவித்த விதத்தை தம் கடிதங்களில் அழகாக விளக்குகிறார்.

தேவனை அனுபவிப்பது ஆலயத்தில்தான் என்று மட்டும் நினைக்காமல், நம் பயணத்தில், வேலை செய்யும் இடத்தில், வீட்டில், சோதனை மத்தியிலான "இரவு"களில், நோயிலும், கஷ்டத்திலும் கூட, "இம்மானுவேல் – தேவன் நம்மோடிருக்கிறார்" என்று நம்பி தேடும்போது, பவுலைப் போல நாமும் தேவ பிரசன்னத்தை உணரலாம். அதன் மூலம் உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தை நாம் எப்போதும் தக்கவைத்துக் கொள்ளலாம். எந்த சூழ்நிலையிலும், "உலகத்தில் இருப்பவனைக் காட்டிலும் நம்மோடிருக்கிறவர் பெரியவர்" என்பதை மறந்து போகக்கூடாது. நம்மனைவருக்கும், கிறிஸ்மஸ் காலம் மெய்யான மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க இம்மானுவேல் அருள் புரிவாராக!

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் – மரியாள்

இது இயேசுவின் தாயாகிய மரியாள் - மத்தேயு 1:18-25, மாற்கு 3:31-35, லூக்கா 1:26-8. "மரியாள்" என்பதின் அர்த்தம் "கிளர்ச்சி". இவள் தாவீதின் குமாரனாகிய நாத்தானின் வம்சத்தில் வந்த ஏலியின் குமாரத்தி. மேசியா என்னும் இரட்சகர் தங்கள் வயிற்றில் பிறக்க இஸ்ரவேலில் அநேக கன்னியர்கள் காத்திருந்த போதிலும், தேவனது கண்கள் இந்த மரியாளைக் கண்டது. இந்த மரியாள் எப்படிப்பட்டவள்?

**கிருபை பெற்றவள்:**

கிருபை என்பது தகுதியில்லாத ஒருவருக்கு காண்பிக்கப்படும் தயவு. மரியாள் ஒரு தச்சனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணாயிருந்தாள். தேவன் தமது குமாரனை மனுஷகுமாரனாக அனுப்பினபோது அவரை வைக்க அவள் கர்ப்பப்பையைத் தெரிந்துகொண்டது அவர் கிருபை. தூதனின் வாழ்த்து செய்தியைக் கேட்டவுடன் மரியாள் கலங்கினபோது, அவள் பயத்தை புரிந்து கொண்ட தூதன், "பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்" என்று கூறி இயேசு யார், எப்படிப்பட்டவர் என்று விளக்கினான்.

**மரியாளின் அர்ப்பணிப்பு:**

தேவதூதன் சொன்னவை மரியாளுக்கு புரியவில்லை என்றாலும் மிகுந்த அடக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும், "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின்படியே ஆகக்கடவது" என்கிறார். தேவ சித்தத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தாள்.

**விசுவாசம்:**

மரியாள் தேவதூதனிடம் "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" எனக் கேட்டாள். தேவதூதன் பரிசுத்த ஆவியானவர் உன்மேல் நிழலிடும்போது இது நடக்கும் என்கிறான். இதை மரியாள் முழுவதுமாக விசுவாசித்தாள். இந்த விசுவாசம் தான் அவளை முழுமையான அர்ப்பணிப்புக்கு வழிநடத்தினது.

**இரகசியங்களை மனதில் வைக்க அறிந்தவள்:**

அநேக பெண்கள் இரகசியங்களை மனதில் வைக்க மாட்டார்கள். இயேசுகிறிஸ்து பிறந்த போது மேய்ப்பர்கள் வந்து "தூதர் எங்களிடம் இரட்சகர்

பிறந்திருக்கிறார் என்று அறிவித்தார்கள்” என கூறினார்கள். சாஸ்திரிகள் தூரதேசத்திலிருந்து வந்து “கிழக்கிலே அவருடைய நட்சத்திரங்களை கண்டு யூதருக்கு ராஜாவை பணிந்துக் கொள்ள வந்தோம்” என்றார்கள். மரியாளோ இந்த சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தனைப் பண்ணினாள்.

**மகனுக்காகக் கரிசனைக் கொண்ட தாய்:**

இயேசுகிறிஸ்து ஊழியம் செய்யும்போது தமது ஊழியப்பாதையில் நெடுந்தூரம் செல்லும்போது தன் மகனைத் தேடிவந்த தாயின் கரிசனையும், அன்பும் பெரிது. அதேபோல் இயேசுவும் தன் தாயிடம் கரிசனையுடையவராய் இருந்தார். தேவ சித்தம் வாழ்வின் நடைபெறுவதற்கு விசுவாசமும் தாழ்மையும் தேவை. தன் மகன் தேவ சித்தத்தை நிறைவேற்றினார் என்ற விசுவாசம் பூரணமாய் மரியாளிடம் இருந்தது.

மரியாளிடம் காணப்பட்ட நல்ல குணநலன்கள் நம் வாழ்விலும் காணப்பட ஜெபிப்போம். மரியாளின் அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல், விசுவாசம், கரிசனை, நம்மையும் ஊக்குவிக்கிறது.

ஆண்டவரிடத்தில் நம்மையும், நம் குடும்பத்தையும் அர்ப்பணிப்போம். அவருக்கு கீழ்ப்படிவோம். விசுவாசத்தில் வளருவோம். கூடுமானவரை எல்லோருடனும், அன்போடும், சமாதானத்தோடும் வாழுவோம். இயேசுகிறிஸ்து நமக்காக பிறந்ததின் நோக்கத்தை நிறைவேற்றுவோம்! தேவன் நம்மோடிருக்கிறர். அவர் நாமம் “**இம்மானுவேல்**”.

**ஷர்மிளா ராஜேஷ்**

## ஜனவரி மாத தலைப்பு

# புதிய உடன்படிக்கை

# *New Covenant*

Dear Children,



The theme this December is "**IMMANUEL**".

Immanuel is a very important name in the Bible. The word Immanuel means "God with us." This reminds us that God is not far away—He is close, loving, and caring.

In the Old Testament, the prophet Isaiah said, "The virgin will be with child and will give birth to a son, and will call him Immanuel." (Isaiah 7:14).

Later, in the New Testament, when Jesus was born, this promise came true. Matthew reminds us of Isaiah's words and explains that Jesus is the Immanuel God promised. (Matthew 1:23)




Jesus came to Earth to be with us, teach us, love us, help us, and save us. Because of Him, we can always know that God is close—when we are happy, scared, sad, or need help. Jesus is Immanuel—God with us!

## TAKE-AWAY POINTS

**God Is Always With Us:** We don't have to feel scared or alone because Jesus is with us everywhere—at home, school, or anywhere we go.

**God Loves Us Deeply:** Immanuel reminds us that God loves us so much that He came close to us, not far away or hidden.

**God Helps and Guides Us:** Because Jesus is with us, He can help us make good choices, comfort us when we're sad, and lead us every day.




**Dear Jesus,** thank You for being Immanuel – God with us.

Help me remember that You are always near, You love me, and You will guide me every day.


Amen.

.

# SAYING IT WITH PICTURES...




"The virgin will conceive and give birth to a son, and they will call him Immanuel" (which means "God with us").
— Matthew 1:23 NIV




And there were shepherds living out in the fields nearby, keeping watch over their flocks at night. An angel of the Lord appeared to them, and the glory of the Lord shone around them, and they were terrified.
— Luke 2:8–9 NIV

## NAMES OF GOD - YAHWEH

Yahweh is a special name for God that means **"I AM"** showing that God is eternal, real, and always there.




For Jewish people, YHWH is the most holy name for God. It is written in the ancient Hebrew language.

Because the written language didn't use vowels, people don't fully agree on how to say it. However, many experts believe "Yahweh" is the most likely way.

It is the personal name of God that He revealed to Moses, signifying that He is the same forever and always present with His people.


This name tells us God has no beginning or end, and He is the one who is, was, and always will be.

**Learn It's Interesting Biblical History**



## TINY TOTS SECTION

### COLOR IN...



# The Birth of Jesus Foretold

An angel appeared to Mary.
He said, "The Lord is with you."


Circle 5 differences in the 2nd picture.





God will give Jesus
the throne of David forever.


Find and count the hidden objects in the picture.







The angel said to Mary,
"You will have a son."

Use the code below to fill in the missing letters.






Mary said,
"I am the Lord's servant."

Find the words hidden in the puzzle below.

GOD LOVE JOY BLESS SON



| | | | | |
|---|---|---|---|---|
| G | O | D | A | B |
| C | L | O | V | E |
| D | E | J | O | Y |
| B | L | E | S | S |
| S | O | N | F | G |


## What's in the Stable?

Circle the things that you might find in the stable where Jesus was born.




# What Does Not Belong?

**INSTRUCTIONS:** Look at the picture. Circle the 10 things that do not belong.



# Hidden Picture

Happy Christmas! These children invited some friends to help act out a nativity scene.
Can you find the hidden objects?



## Spot the difference - Find 6 things



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "IMMANUEL – GOD WITH US"

1. What does the name Immanuel mean? (Matthew 1:23)

a. God is far away. b. God is with us.
c. God is silent. d. God is Angry.

2. Who prophesized the name Immanuel?

a. Moses b. Peter
c. David d. Isaiah

3. Who was born to fulfill the promise of Immanuel? (Matthew 1:23)

a. Jesus b. Peter
c. David d. Isaiah

4. Where does God say He will always be? (Matthew 28:20)

a. Within Temples. b. Only in our Dreams.
c. Only in Heaven. d. With his People.

5. Why did Jesus come to Earth? (John 1:14)

a. To rule over the World. b. To Be with us and save us.
c. To build an Army. d. To Defeat our enemies.

6. Immanuel reminds us that God is…? (Psalm 139:7-10)

a. Far Away. b. Invisible.
c. Close to us . d. Only in the church.

7. Who said, "God is with us" when Jesus was born? (Matthew 1:23)

a. Joseph b. Mary.
c. Herod. d. The Angel.

8. What should we do knowing that God is always with us? (Philippians 4:6-7)

a. Trust and pray. b. Run away.
c. Keep quiet. d. Be brave.

9. Which holiday reminds us that Jesus, Immanuel, came to be with us?

a. Christmas. b. Easter.
c. Passover. d. Harvest.

10. How does God being with us, help us? (Psalm 46:1)

a. Makes us rich. b. Keeps us strong and safe.
c. Controls our behavior d. Punishes us when we sin.

11. How should we be, as God is always with us? (Joshua 1:9)

a. Be strong, courageous and trust God. b. Be scared.
c. Taking risks and gamble. d. Live as we like.

12. Which gospel states the fulfilling of the "Immanuel" prophecy?


a. Matthew b. Mark c. Luke d. John

# Hidden Picture

Lots of places in the world don't have snow at Christmastime. This family loves decorating their own kind of Christmas tree. Can you find the 12 hidden ornaments for them to put on the tree?




# THE TESTAMONY OF HUDSON TAYLOR




Hudson Taylor, a missionary to China in the 1800s, faced many challenges—strange lands, sickness, and sometimes rejection. Yet, he always trusted that God was with him.

Once, while traveling through a remote area in China, Hudson Taylor and his companions were caught in a sudden storm. The river swelled, the path became slippery, and the travelers feared for their lives.

Hudson prayed silently, trusting that God was with them. Miraculously, they found a safe crossing, and everyone reached shelter without harm. Later, Hudson wrote that in that dangerous moment, he truly felt Immanuel protecting and guiding them.



# MISSIONARY JOURNEY

## APOSTLE # 11 JUDAS THADDEUS




Jude Thaddeus was the younger brother of James. In John 14:22, he asked Jesus, "Lord, why are you going to reveal yourself only to us and not to the rest of the world?"

The answer Jesus gave Thaddeus was simple: "Anyone who loves me will obey my teaching.

My Father will love them, and we will come to them and make our home with them.

Thaddeus took the gospel message north, where he performed miracles, preached, and founded a church in Edessa, an area in modern Turkey.

One tradition says that he was either clubbed or axed to death for his faith, and another that he was crucified.




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of December is: ________________________________.
2. List 3 take-away points that we can learn from "the Immanuel" concept.

   a. _______________________________; c. ___________________________________

   b. _______________________________;
3. Yahweh means "___________________________________________."
4. ______________________________ was a missionary to ____________ in the 1800s.
5. Thaddeus took the gospel message north, where he performed miracles, preached, and founded a church in _________________________________.

**Merry Christmas and a Blessed New Year 2026.**

**May our Lord Jesus Christ always Be with You.**

**God bless**
**Mrs. Briliya Jeyaseelan**

## Answers to November Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "ALL SAINTS"

1. c. Someone who loves and follows Jesus
2. b. All believers in Jesus
3. d. To learn from their faith.
4. c. Jesus
5. a. A cloud of witnesses.
6. b. Faith in Jesus.
7. a. Love and serve others.
8. a. Rest and praise God.
9. a. By following Jesus faithfully.
10. c. The lives of believers who loved Him
11. a. How to obey and trust God.
12. a. God's Word

## Complete the Short Review Below...

6. The theme for the month of November is: **All Saints**.
7. List 4 take-away points that we can learn from "the All Saints" concept.

a. **Saints are God's People**; **c. We Remember Their Faith**

b. **They Point Us to Jesus**; **d. We're Part of God's Big Family Too.**

8. JEHOVAH RAPHA means " **THE LORD WHO HEALS**."
9. **Groves** pioneered the first Protestant mission to Arabic-speaking Muslims, settling in **Baghdad**, and later in **Southern India.**
10. Tradition says that Simon the Zealot preached the gospel in **Persia.**

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

**சம்பந்தப்பட்ட நபர் யார் என எழுதுக:**

**எ. கா:**

பன்னிரண்டு குமாரர்

விடை: யாக்கோபு ஆதியாகமம் **35:23**

1. பன்னிரண்டு தூண்கள்
2. பன்னிரண்டு அப்போஸ்தலர்
3. பன்னிரண்டு சிங்கங்கள்
4. பன்னிரண்டு பிரபுக்கள்
5. பன்னிரண்டு ஏர்
6. பன்னிரண்டு மனிதர்
7. பன்னிரண்டு கற்கள்
8. பன்னிரண்டு வயது
9. பன்னிரண்டு மணியக்காரர்
10. பன்னிரண்டு அப்பங்கள்

**விடை எழுதுக:**

11. பன்னிரண்டு இரத்தினங்களின் பெயர்கள் என்னென்ன**?** எழுதுக.
12. பன்னிரண்டு நபர்கள் இயேசுவின் பிறப்பில் சம்பந்தப்பட்டவர்கள் - யார்**?** யார்**?** பெயர்களை இருப்பிடத்துடன் எழுதுக. (மத்தேயு - யோவான்)

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

## நவம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | எலிசா | 2 ராஜா. 4:8,9 |
| 2 | கர்த்தர் | உபாகமம் 33:2 |
| 3 | காவலாளன் | தானியேல் 4:13 |
| 4 | பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் **கர்த்தரை** உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். | சங்கீதம் 149:5-9 |
| 5 | யூதா | ஓசியா 11:12 |
| 6 | லித்தா ஊர் | அப். 9:32 |
| 7 | ஆவியானவர் | ரோமர் 8:27 |
| 8 | ஸ்தேவானுடைய வீட்டார் | 1 கொரி.16:15 |
| 9 | பவுல் | எபேசியர் 3:8,1 |
| 10 | தேவ வசனம் | கொலோ. 1 :25 |
| 11 | பிலேமோன் | பிலேமோன் 1:7 |
| 12 | பவுல் அப்போஸ்தலர் | அப். 26:10,1 |
| 13 | முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் | வெளி. 20:6. |
| 14 | அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். | ரோமர் 12:!3 |
| 15 | அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாட வேண்டும். | சங்கீதம் 30:4 |

## நவம்பர் மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs.Desigta Jaison
3. Mr.Emmanuel
4. Mrs.Esther Pauline Rani
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Helen Sharmila Ray
8. Mrs.Hame RajaGuru
9. Mr.Jeba Jino
10. Mrs.Jasmine Sobha
11. Mrs.Jebaseeli Asir
12. Dr.Mrs.Jenila Gannraj.L
13. Mrs.Kishi Maher
14. Mrs.Manuel Sarah
15. Mrs.Nandhini Rajkumar
16. Mrs.Peppin Jenson
17. Mrs.Persis John
18. Mr.Prawin Durai Sam
19. Mrs.Priya Ranjith Kumar
20. Mrs.Praveena Arun
21. Mr.Raja Guru
22. Mr.Ramesh Soundara Rajan
23. Mr.Salin Robert
24. Mrs.Selvi George
25. Mrs. Shobana Milton
26. Mrs.Sheeba Merlin
27. Mrs.Sheeba Herlin
28. Mrs.Sheneegah Stanly
29. Mrs.Sharmila Rajesh
30. Mrs. Shajeethe Gracy
31. Mrs. Subija Jino
32. Mrs. Suni Smila Edwin
33. Mrs.Sweetilin Frank
34. Mrs.Valentine Sharmila Paul
35. Mrs. Vithya Dinesh
36. Mr.Miehael

## Children who answered November – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Aaran
4. Brightson Timothy Raj
5. Benson Immanuel Raj
6. Camryn Robert.S
7. Clement Dave
8. Daniel Vanya (Ruwais)
9. Danion Lemuel
10. Diyas Dinesh
11. Dafina Dinesh
12. Darion Lemuel
13. Evelyn Loria V
14. Evaniya Sherin
15. Evangelia Sharon
16. Efrona
17. Effrin
18. Eric Jayden
19. Gabrilyn Hannah
20. Galvin Robert.S
21. Giana Elin
22. Hadriel Adventier
23. Janey Titus
24. Jaslin Shanna
25. Jaylan Paul Jino
26. Joanna Paul Jino
27. Johanan Paul Jino
28. Jessica Eban
29. Jevlyn Ana
30. Jeya Jehosheba Maher
31. Jim Scott
32. Jen Scudd
33. Jeffrey Samuel
34. Jenessa Johnson
35. Joel Abrakam
36. Joha Anit Manuel
37. Johan Sam Manuel
38. Liana Erin
39. Leona Juliet
40. Leonel I.J. Stalin
41. Linuel I.J. Sherwyn
42. Mishael Wesley (Ruwais)
43. Pristina samlynPrince
44. Rivqah Deby Rajkumar
45. Sherlyn Sana
46. Sam Jesvin Vincent
47. Starlyne Mobile
48. Steffi Priscilla .R
49. SelvaJesvin (Ruwais )
50. Yedidiah Arun (Ruwais)
51. Yovaan jairus (Ruwais)
52. Keren Tesso



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**சிப்போரின் விண்ணப்பம்**

தோமா எப்படியாவது பிசாசின் பிடியில் சிக்கியுள்ள தன் மனைவியையும் மகளையும் விடுவிப்பார் என்று நம்பிய சிப்போர், அவர் ஊழியம் செய்த இடங்களிலுள்ள ஜனங்களை எல்லாம் சந்தித்து, அவரைப் பற்றி விசாரித்தான் ஜனங்கள் அனைவரும் தோமாவைப் பற்றிக் கூறிய சாட்சிகளைக் கேட்ட அவன் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்று விட்டான்.

கடைசியாக, மிகுந்த நம்பிக்கையோடு தோமாவைச் சந்தித்த சிப்போர், "கடவுளின் மனிதனாகிய தோமாவே, நீர் யாரிடத்திலும் பணத்தையோ, பரிசுப் பொருட்களையோ வாங்குவதில்லை என்பதையும், உமக்கு யாராவது மனப்பூர்வமாக அளிக்கிற பரிசுப் பொருட்களைக் கூட ஏழைகளுக்குக் கொடுத்து விட்டு, அவர்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கையின் ஒளியை ஏற்றுகிறீர்" என்பதையும் இங்குள்ள ஜனங்கள் மூலமாக நான் கேள்விப்பட்டேன்.

நீர் அனுமதித்தால், அதிகமான வெகுமதிகளையும்,பணத்தையும் உமக்குத் தருவேன். ஏனென்றால், இந்தியாவிலுள்ள மிகப் பெரிய செல்வந்தர்களில் நானும் ஒருவன். எனது மனைவியும், எனது ஒரே மகளும் மூன்று ஆண்டுகளாக பிசாசின் பிடியில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிசாசின் தாக்குதலின் நிமித்தமாக இவர்கள் இருவரையும் ஓர் தனியறையில் அடைத்து வைத்திருக்கிறேன். நான் அவர்களோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டு மூன்று வருடங்களுக்கும் மேலாகிறது. நீர் வந்து அவர்களை பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும்"என்று மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டான்.

அப்பொழுது தோமா அவனைப் பார்த்து, "இயேசு கிறிஸ்து இவர்களையும் விடுதலையாக்குவார் என்று நீங்கள் விசுவாச்சிக்கிறீர்களா?" என்று கேட்டார்.

அந்தத் தளபதி, "ஆம்!" என்று பதிலளித்தார். அதற்கு தோமா, "உமது வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவினிடம் ஒப்புக் கொடுப்பீராக" என்றார். உடனே சிப்போர், "இயேசு கிறிஸ்துவை எனக்கு காண்பியுங்கள். அப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்" என்று சொன்னான். அதற்கு தோமா அவனைப் பார்த்து, "நம்முடைய மாம்ச கண்ணால் அவரைப் பார்க்க முடியாது. ஆவிக்குரிய கண்களுக்கு மட்டும்தான் அவர் புலப்படுவார்" என்று சொல்லி, அதைக் குறித்த சத்தியத்தை அவனுக்கு விளக்கிச் சொன்னார். கடைசியில், அவன் இயேசு கிறிஸ்துவை முழுவதுமாக விசுவாசித்து ஏற்றுக் கொள்வதாக சொன்னான்.

சிப்போருடன் பயணம் செய்வதற்கு தயாரான தோமாவை விசுவாசிகள் கண்ணீருடன் வழியனுப்பினர்.

**தோமாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த காட்டுக்குதிரைகள்**

தோமா, சிப்போருடன் சேர்ந்து பயணம் செய்யும்படியாக அவன் இரதத்தில் ஏறிக்கொண்டார். சிப்போர், தன் சாரதியினடத்தில், "நான், இவருடன் அமர்ந்து பிரயாணம் செய்வதற்கு பாத்திரனல்ல். எனவே நான் இந்த இரதத்தை ஓட்டுகிறேன்" என்று சொல்லி, இரதத்தை ஓட்டினான். ஆனால் தோமாவோ, மிகுந்த அன்போடு தளபதியை தன் அருகில் அமர்ந்து பயணிக்கும்படி செய்தார். நெடுந்தூரப் பயணத்தில் களைப்பின் மிகுதியினாலும், வெயிலின் தாக்கத்தினாலும் இரதத்தை இழுத்துச் சென்ற குதிரைகள் களைப்படைந்து, தொடர்ந்து பயணம் செய்ய முடியாமல் ஆகிவிட்டது. உடனே சிப்போர் வேறு குதிரைகளை அழைத்து வர ஏற்பாடு செய்ய நினைத்தான்.

ஆனால் தோமாவோ, "இந்த நெடுந்தூரப் பயணத்தைக் குறித்து கலங்காதீர்கள். நான் பிரசங்கிக்கிற இயேசு கிறிஸ்து இந்த சூழ்நிலையில் ஒரு அற்புதம் செய்வார்!" என்று சொன்னார்.

பின்பு தோமா சிப்போரிடத்தில், தூரத்தில் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்த சில காட்டுக் குதிரைகளை காண்பித்து, அவைகளிடம் சென்று தான் சொன்னதாக சொல்லி, நான்கு குதிரைகளை அழைத்து வரும்படியாக சொன்னார். சிப்போர் திரளான காட்டுக் குதிரைகளைக் கண்டு முதலில் பயந்தாலும், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அருகில் சென்று, "தோமாவுக்கு நான்கு குதிரைகள் தேவை" என்று குதிரைகளைப் பார்த்து கூறினார்.

அப்போது எல்லாக் குதிரைகளும் தோமாவினிடத்தில் ஓடி வந்தன. அவைகள் அனைத்தும் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் தங்கள் வாய்களை திறந்து பேசி தேவனைத் துதித்தன! அவைகளில் நான்கு குதிரைகள் மட்டும் தானாக முன் வந்து, இரதத்தை இழுக்கும் நுகக்கால் பகுதிகளை தங்கள் கழுத்தின் மேல் ஏற்றுக் கொண்டன. - **தொடரும்**

# துணுக்குகள்



## பாடல் பிறந்த கதை

**இம்மானுவேலே வாரும் வாருமே [பாமாலை 46]**
**O come, O come Emmanuel**

**1.இம்மானுவேலே வாரும், வாருமே,**
**மெய் இஸ்ரவேலைச் சிறை மீளுமே;**
**மா தெய்வ மைந்தன் தோன்றும் வரைக்கும்**
**உன் ஜனம் பாரில் ஏங்கித் தவிக்கும்**
**மகிழ்! மகிழ்! சீயோனின் சபையே,**
**இம்மானுவேலின் நாள் சமீபமே.**

**2. ஈசாயின் வேர்த் துளிரே, வாருமே,**
**பிசாசின் வல்ல கோஷ்டம் நீக்குமே;**
**பாதாள ஆழம் நின்று ரட்சியும்,**
**வெம் சாவின்மேல் பேர் வெற்றி அளியும்.**

**'மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார்' ஏசாயா 59:20**

திருச்சபையின் ஆண்டு வெவ்வேறு காலங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இவற்றில் முக்கியமானவை, ‘அட்வெந்து’ (கிறிஸ்துவின் வருகை) காலமும், ‘லெந்து’ (கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும்) காலமுமாகும். இவற்றைத் தவிர பல பண்டிகை நாட்களும், திருநாட்களும் உண்டு. ஆதித் திருச்சபையிலும், இக்காலத்தில் ஆங்கிலத் திருச்சபை போன்ற சில சபைகளிலும் பண்டிகை நாட்களுக்கு முந்தின நாள் மாலை ஆராதனை, ‘விழிப்பு ஆராதனை’ என்னப்படும். கிறிஸ்து பிறப்புத் தினத்திற்கு முந்தின நான்கு வாரங்கள் அட்வெந்து நாட்களாக ஆசரிக்கப் படுகின்றன. இந்த நாட்களில், மாலை ஆராதனைகளில், பரிசுத்த கன்னிமரியாளின் கீதத்துக்கு முன்னும் பின்னும், அந்தந்தப் பண்டிகை காலத்துக்குப் பொருத்தமான ஒரு சிறிய வாக்கியம் பாடப்படுவது வழக்கம். சபையார் இரு பகுதியாக, அல்லது குருவானவரும் சபையாருமாக இதை மாறி மாறிப் பாடுவார்கள். இப்பாடலுக்கு ஆங்கிலத்தில் ‘Antiphon’ என்று பெயர்.


ஆதி சபையில் அட்வெந்து நாட்களில் பாடப்படும் ‘அந்திபன்’(Antiphon), ‘ஓ’ என்னும் ஒரே எழுத்தாகும். இதைச் சில விநாடிகள் இழுத்துப் பாடுவர். இந்த ‘ஓ’ என்பது வேதனையைக் குறிக்கும் ஒரு தொனியாகும். திருச்சபையானது ஆண்டவர் வருகைக்காக வாஞ்சையுடன் காத்திருக்கும் தவிப்பை இந்த ‘ஓ’ என்னும் தொனி குறிப்பிடும். சில காலங்களுக்குப் பின், இந்த ‘ஓ’ என்னும் தொனியுடன் வேதபுத்தகத்தில் நமது ஆண்டவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் சிறப்புப் பெயர்களாகிய ‘இம்மானுவேலே’, ‘ஈசாயின் வேர்த்துளிரே’, ‘அருணோதயமே’, ‘தாவீதின் திறவுகோலே’, ‘வல்லமை பொருந்தியவரே’

என்பவைகளும் சேர்த்துப் பாடப் பட்டன. இன்னும் சில காலங்களுக்குப் பின், இந்த அந்திபன்களுடன் ஒரு சிறிய ஜெபமும் சேர்த்துப் பாடப்பட்டது. கிறிஸ்து பிறப்புக்கு முந்தின ஏழு நாட்களில் மாலை ஆராதனைகளில், ஒவ்வொரு நாளும் ஓர் அந்திபன் பாடல் மட்டும் பாடப்பட்டது. அநேக ஆண்டுகளுக்குப்பின், பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒரு பக்தன் இந்த ஐந்து அந்திபன்களையும், ஐந்து கவிகளுள்ள ஓர் அட்வெந்துப் பாடலாக எழுதினார். இது லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்ததால் லத்தீன் சபைகளில் மட்டும் பாடப்பட்டு வந்தது, இப்பாடல் அட்வெந்து நாட்களுக்கேற்ற ஒரு பாடலாக இருந்ததால், பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஜான் மேசன் நீல் பண்டிதர் (John Mason Neale) அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இப்போது இது பல பிறமொழிகளில் ஓர் அட்வெந்துகாலப் பாடலாகப் பாடப்பட்டு வருகிறது.

இப்பாடலை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, உலகமெங்கும் பாடப் படுவதற்குக் காரணமாயிருந்த ஜான் மேசன் நீல் பண்டிதர் 1818ம் ஆண்டு, ஜனவரி மாதம் 28ம் தேதி லண்டன் மாநகரில் பிறந்தவர். அவரது தந்தை ஆங்கிலச் சபையைச் சேர்ந்த ஒரு போதகர். ஜான் மேசன் கல்லூரிப் படிப்பைக் கேம்பிரிட்ஜ் திரித்துவக் கல்லூரியில் முடித்தார். இங்கு மாணவனாயிருக்கும்போது கிறிஸ்தவச் செய்யுள் எழுதும் போட்டிகளில் பதினொரு முறை பரிசுகள் பெற்றார். திருச்சபை மறையில் ‘ஆக்ஸ்வர்டு குழு’வை அவர் ஆதரித்ததால், ஆங்கிலச் சபையில் உயர்பதவிகள் அவருக்குக் கொடுக்கப் படவில்லை. உடல்நிலை குன்றியதால், இரு ஆண்டுகள் ஸ்பெயின் நாட்டில் வசிக்க வேண்டிவந்தது. அவர் ஒரு சிறந்த கல்விமான். ஆங்கிலம் உட்பட இருபது மொழிகள் கற்றிருந்தார். திருச்சபை வரலாறு, ஆலயக் கட்டிடங்கள் முதலியவற்றைக் குறித்த பல நூல்கள் எழுதியிருந்தார். மேலும், பல பாடல்கள் எழுதியதுடன், கிரேக்க லத்தீன் மொழிகளிலிருந்து, ஏராளமான பாடல்களை மொழிபெயர்த்தார். அவரது சிறந்த அறிவையும், கிறிஸ்தவச் சேவையையும் பாராட்டி, அமெரிக்காவிலுள்ள ஒரு பல்கலைக்கழகம் அவருக்குப் பண்டிதர் (Doctor of Divinity) பட்டம் அளித்தது. ஜான் மேசன் நீல் பண்டிதர் 1866ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 6ம் தேதி ஈஸ்ட்டு கிரின்ஸ்டெட் என்னுமிடத்தில் தமது 48ம் வயதில் காலமானார்.

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**





# ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – டிசம்பர் 2025



| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 5 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 7 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 2.00 pm – 5.00 pm | பெண்கள் கிறிஸ்மஸ் கூடுகை |
| 9 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 12 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | கிறிஸ்மஸ் கீத ஆராதனை - St.Andrew's church |
| 19 | வெள்ளி | 8.00 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 23 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 25 | வியாழன் | 5.00 am – 6.30 am | கிறிஸ்மஸ் பண்டிகை திருவிருந்து ஆராதனை |
| 26 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | குடும்ப கீத ஆராதனை - St.Andrew's church |
| 30 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வியாழன் | 11.30 pm – 1.00am | பழைய & புது வருட திருவிருந்து ஆராதனை |

| | |
|---|---|
| **05-12-25** | |
| பாமாலை – 52 | நீர் வாரும் கர்த்தரே |
| பாமாலை – 53 | பாவிக்காய் மரித்த இயேசு |
| கீர்த்தனை – 66 & 266 | எனது கர்த்தரின் ராஜரீக நாள்<br>ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே |
| பாமாலை – 33 | இந்நாள்வரைக்கும் கர்த்தாவே |
| **12-12-25** | |
| பாமாலை – 73 | ராஜன் தாவீதூரிலுள்ள |
| Medley | Joy to the World, Hark the Herald & While Shepherds |
| கீர்த்தனை – 21 & 35 | ஆதித் திருவார்த்தை திவ்விய<br>கண்டேனென் கண்குளிர |
| பாமாலை – 59 | ஒப்பில்லா திரு இரா |
| **19-12-25** | |
| பாமாலை – 49 | களிகூரு சீயோனே |
| பாமாலை – 57 | இப்போ நாம் பெத்லெகேம் சென்று |
| கீர்த்தனை – 33 & 34 | ஆ! அம்பர உம்பர மும் புகழுந்திரு<br>அரசனைக் காணாமலிருப்போமோ |
| கீர்த்தனை – 6 | சீர்மிகு வான்புவி தேவா |
| **25-12-25 – கிறிஸ்துமஸ் ஆராதனை** | |
| பாமாலை – 61 | பக்தரே வாரும் |
| பாமாலை – 62 | கேள்! ஜென்மித்த ராயர்க்கே |
| கீர்த்தனை – 28 & 22 | சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து<br>அதி மங்கல காரணனே |
| பாமாலை – 71 | மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும் |
| **26-12-25** | |
| பாமாலை – 83 | நீர் தந்த நன்மை யாவையும் |
| பாமாலை – 82 | இம்மட்டும் தெய்வ கிருபை |
| கீர்த்தனை – 74 & 11 | துதி தங்கிய பரமண்டல<br>வந்தனம் வந்தனமே |
| பாமாலை – 38 | நீர் தந்த நாளும் ஓய்ந்ததே |
| **31-12-25 – பழைய மற்றும் புது வருட ஆராதனை** | |
| பாமாலை – 80 | இன்னோர் ஆண்டு முற்றுமாய் |
| பாமாலை – 78 | ஆண்டவா உமக்கே ஸ்தோத்ரம் |
| கீர்த்தனை – 302 & 303 | ஆனந்தமே ஜெயா! ஜெயா!<br>எந்நாளுமே துதிப்பாய் |
| பாமாலை – 31 | கீழ் வான கோடியின் |




## திருமறை பாட ஒழுங்குகள் – டிசம்பர் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **05-12-25** | ஆண்டவரின் வருகை | யாத். 2:1-10 | 1 தெச. 4:13-18 | மத்தேயு 25:1-13 | - |
| **12-12-25** | இம்மானுவேல் | ஏசாயா 7:1-14 | 1 பேதுரு 3:8-16 | மத்தேயு 1:18-25 | 150 |
| **19-12-25** | வழியை ஆயத்தப்படுத்தும் திருப்பணி | ஏசாயா 40:1-10 | 2 பேதுரு 3:1-14 | லூக்கா 3:1-9 | - |
| **25-12-25** | கிறிஸ்துவின் பிறப்பு | ஏசாயா 9:1-9 | கலாத்தியர் 4:1-7 | லூக்கா 2:1-17 | 20 |
| **26-12-25** | சாஸ்திரிகள் | மீகா 5: 2-7 | பிலிப்பியர் 2:5-11 | மத்தேயு 2:1-12 | 138 |
| **31-12-25 & 01-01-26** | பழைய & புது வருடம் | ஆதி. 32:3-12 | எபேசியர் 2:13-22 | லூக்கா 5:17-26 | 24 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **02-12-25** | நீதிமொழிகள் | 16:16-30 | Al Wadha |
| **09-12-25** | நீதிமொழிகள் | 17:1-15 | Hamdan |
| **23-12-25** | நீதிமொழிகள் | 17:16-31 | Muroor |
| **30-12-25** | நீதிமொழிகள் | 18:1-15 | Mussafah |

# BIRTHDAY - DECEMBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Kathryn Joan |
| 2 | Mr. | Ajay Saul |
| 2 | Mr. | Samuel Leslie |
| 4 | Mrs. | Helen R |
| 5 | Master. | Hadriel Adventier |
| 6 | Mr. | Pravin Kumar Noah S |
| 10 | Baby | Alice Jehosha J |
| 11 | Baby | K. M. Andrea Kim |
| 12 | Mr. | Joslin Ananth N. |
| 12 | Baby | Aleina Siera |
| 13 | Mrs. | Jinitha Raja |
| 14 | Mr. | Sathia Saul Raj P S |
| 14 | Mrs. | Priya Irene Elizabeth Ranjithkumar |
| 14 | Master | Joel Abraham Danial |
| 18 | Mr. | Ebulin Rajakumar S |
| 19 | Mrs. | Kasthuri Johnson |
| 19 | Ms. | Hannah Sangeetha Paul |
| 20 | Baby. | Gaddiel Adventier |
| 21 | Miss. | Alwina Angel P |
| 21 | Mr. | Manikandan |
| 22 | Mr. | Bamish P. |
| 22 | Ms. | Dalvina Esther |
| 25 | Mr. | Prasanna Sekaran |
| 26 | Mrs. | Mary Joseph |
| 26 | Master | Abhay E |
| 27 | Miss. | Adriel Joanna E |
| 29 | Mrs. | Jeniha Beeshow |
| 30 | Baby. | Clifford Dave |
| 30 | Baby. | Ryana Juliet |

# WEDDING ANNIVERSARY - DECEMBER




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 4 | Mr. & Mrs. | Julian Christian. D |
| 5 | Mr. & Mrs. | Shibin I |
| 9 | Mr. & Mrs. | Ebulin Rajakumar S |
| 9 | Mr. & Mrs. | Easter Rajesh |
| 11 | Mr. & Mrs. | Lipny Gilbert |
| 12 | Mr. & Mrs. | Jayaraj Robinson |
| 14 | Mr. & Mrs. | Thiyagu Murugaraj |
| 14 | Mr. & Mrs. | Manikandan |
| 18 | Mr. & Mrs. | Chris Lilian Vasantha Prince |
| 21 | Mr. & Mrs. | Arul Sugirson Samuel. K |
| 22 | Mr. & Mrs. | Sam Winston |
| 23 | Mr. & Mrs. | Denson Thangaiyan |
| 27 | Mr. & Mrs. | Vino Thampiraj |
| 27 | Mr. & Mrs. | Carmel Beeshow |
| 27 | Mr. & Mrs. | Ezra Jeorld |
| 27 | Mr. & Mrs. | Arnold A |
| 27 | Mr. & Mrs. | Jegan Mahesh |
| 27 | Mr. & Mrs. | Justin Pious Raj |
| 28 | Mr. & Mrs. | Anti Grapeson D |
| 28 | Mr. & Mrs. | Arun Jebastin Gnanaiah |
| 29 | Mr. & Mrs. | Paul Emerson Karunakaran |
| 29 | Mr. & Mrs. | David Crishanth Alexander |
| 29 | Mr. & Mrs. | Shibu Kumar |
| 29 | Mr. & Mrs. | Kavin S |
| 30 | Mr. & Mrs. | David Paulraj. S |
| 30 | Mr. & Mrs. | Kins. R |
|  | Mr. & Mrs. | Behin Jeyakumar A |





## Harvest Festival







# Children's Day Service














## Junior Church Christmas Tree











ST ANDREW'S CHURCH
BUILDING BRIDGES SINCE 1968


Merry
Christmas